1978 ஆகஸ்ட் 31]

மேலும் பாரதியாருடைய கொள்கைகள், கோட்பாடுகள் ஆகிய வைகள் அடங்கிய புத்தகங்களை அங்கு வைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அந்த நினைவுச் சின்னத்தை சரியான முறையில் திறந்து வைக்கவில்லை என்ற புகாரை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கி றார்கள். அதுபற்றி விசாரிக்கப்படும். அந்தக் கட்டிடத்தின் மதிப்பு ரூபாய் 6,900 என்றும், அங்கேயுள்ள நூலகத்தின் விலையின் மதிப்பு ரூபாய் மூன்றுயிரம் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

THIRU G. VASANTHA PAI : Sir, will the Hon. Minister be pleased to state whether, when the Government acquire houses of distinguished personages like the great poet Bharathiyar, they pay compensation at the rate mentioned in the Land Acquisition Act or a higher solatium to the dependants ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தனிக் கேள்வியைப் போடுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : அந்த இல்லத்தை அரசுடை மையாக்கும்போது, அதற்குரிய குறிப்பிட்ட தொகையை பாரதியாருடைய வாரிசில் யார் பெற்றுக் கொண்டார்கள் ? முறைப்படியான வாரிசாக உள்ளவர்கள் பெற்றுக் கொண் டார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது பற்றி விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் : மகாகவி பாரதியா ருடைய எட்டயபுரத்திலுள்ள இல்லத்தை நினைவுச் சின்ன மாக்கியதைப் போலவே, அவர் திருவல்லிக்கேணியில் வாழ்ந்த வீட்டையும் அரசுடைமையாக்குவோம் என்று நெருக்கடி காலத்தில் ஆளுநராக இருந்த திரு. சுகாதியா அவர்கள் காலத்தில் அறிவிப்பு வந்ததை அரசு அறியுமா? அவருடைய அந்த அறிவிப்பைச் செயல்படுத்த இந்த அரசாங்கம் திட்டமிட்டிருக் கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுபற்றிய விவரம் இல்லை.

Members elected from Local Authorities Constituencies

* 7 *Q*.—THIRU A. BALASUBRAMANIAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to make the members who were elected to the Legislative Council from

Local Authorities Constituencies comprising two Districts as Members of the two District Development Councils; and

(b) if so, when it will be implemented ?

ஊராட்சி மன்ற தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்ற உறுப்பினர்கள்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) இரு மாவட்ட உள்ளாட்சி மன்றத் தொகுதிகளிலிருந்து மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்ற உறுப்பினர்களை, இரு மாவட்ட வளர்ச்சி மன்றங்களிலும் உறுப்பினர்களாக்கும் உத்தேசம் ஏதும் அரசுக்கு உண்டா ?

(இ) ஆம் எனில், அது எப்பொழுது நடைமுறைப்படுத்தப் படும் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) & (இ) இரண்டு மாவட்டங்களைக் கொண்ட ஒரு உள்ளாட்சி மன்றத் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்படும் ஓர் உறுப்பினர் அந்த இரண்டு மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட அபிவிருத்தி மன்றங்களிலும் உறுப்பினராவதற்கு தற்போதுள்ள சட்டத்திலேயே இடமுள்ளது.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : சேலம் மாவட்டத்தில் வடக்கு அபிவிருத்தி மாவட்டம் தெற்கு அபிவிருத்தி மாவட்டம் ஆகிய இரண்டிலும் கூட்டங்கள் நடைபெறுகின்றன. நான் தெற்கு சேலம், வடக்கு சேலம் ஆகிய இரண்டுக்கும் சேர்ந்து எம். எல். சி. யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறேன். ஆகவே வடக்கு தெற்கு ஆகிய இரண்டு அபிவிருத்தி மாவட்டங்களிலிருந்தும் அழைப்பு அனுப்புவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

திரு. செ. முத்துசாமி : என்னுடைய ஆசிரியர் தொகுதியில் நான்கு மாவட்டங்கள் இருக்கின்றன. அதிலே 6 டி. டி. சி. கவுன்சில்கள் வருகின்றன. ஆரம்ப காலத்தில் ஒரு டி. டி. சி. கவுன்சிலிலிருந்து மெம்பராகவும் மற்ற டி. டி. சி. கவுன்சிலில் சிறப்புப் பிரதிநிதியாகவும் இருக்க உரிமை இருந்தது. இப்போது திடீரென்று அதை நிறுத்தி விட்டார்கள். ஒருவருடைய எல்லைக்குட்பட்ட எல்லாத் தொகுதிகளிலிருந்தும் அழைப்பு அனுப்பப்படுவதில்லை. ஆகவே இது குறித்து அரசு உடனடியாக ஒரு குறிப்புரையை டி. டி. சி. மன்றங்களுக்கு அனுப்புமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அனுப்பி வைக்கப்படும்.

1978 ஆகஸ்ட் 31]

(முற்பகல் 11-10)

திரு. க. அறிவழகன் : தலைவரவர்களே, சென்னை மாவட்டத்திலே இப்படிப்பட்ட வளர்ச்சிக் குழுக்கள் இல்லாத காரணத்தால், யாருமே அழைக்கப்படுவது கிடையாது. இப்படிப்பட்ட வளர்ச்சிக் குழுக்களை அமைக்க அரசுக்கு உத்தேசம் உள்ளதா? அப்படி அமைக்கப்படுமானால், உறுப்பினர்களை அழைக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : சென்னையிலே அப்படிப்பட்ட மாவட்ட வளர்ச்சிக் குழுக்கள் அமைக்கும் உத்தேசம் இல்லை.

திரு. க. இராமமூர்த்தி: பேரவையிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்ற எங்களைப் போன்ற உறுப்பினர்கள் நியாயமாக அத்தனை மன்றங்களிலும் இடம் பெற்றிருக்க வேண்டும். ஒரு பகுதியிலே இருந்து தான் மாவட்டங்களிலேயிருந்து அழைப்பு வருகிறது. உதாரணத்திற்கு தென்னுற்காடு மாவட்டத்தில் அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களிலே நகராட்சி மன்றங்களிலே நாங்கள் வசிக்கிற மன்றங்களிலே கூட நாங்கள் இடம் பெறவில்லை என்ற நிலைமை இருப்பது அரசுக்குத் தெரியுமா? இதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அவர்கள் எந்த அளவுக்கு தங்களுடைய நேரத்தை இப்படிப்பட்ட காரியங்களுக்கு ஒதுக்க முடியும் என்பது தெரியவில்லை. அவர்கள் வசிக்கிற பகுதியிலே இருக்கிற குழுக்களிலே இடம் பெறவில்லையென்றால், அதுபற்றி அரசுக்குத் தெரியப்படுத்தினால், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. மீனுட்சிசுந்தரம் : எங்களுக்கு நேரம் இருக்கிறதோ இல்லையோ நாங்கள் விரும்புவதெல்லாம் சந்தர்ப்பம் கொடுத்தால், வாய்ப்பு கொடுத்தால், நாங்கள் கலந்து கொள்வோம். எங்களுக்கு வாய்ப்பளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அவர்கள் வசிக்கிற பகுதியிலே உள்ள குழுக்களிலே இடம் பெற்றால், நிச்சயமாக அது வளர்ச்சிக்கு உதவும். அதுபற்றி கவனிக்கப்படும்.

THIRU G. VASANTHA PAI : Sir, may I know from the Hon. the Minister for Local Administration when the elections to this House from the Local Authorities Constituencies will be completed?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : எங்கோ பொருத்தமில்லாமல் கேட்கிறீர்கள்.

திரு. க. இராமமூர்த்தி : கேட்ட கேள்வியின் ஒரு பகுதிக்குத் தான் மாண்புமிகு அமைச்சரவர்கள் பதிலளித்தார்கள். ஒரு பகுதி மக்கள் குழுவில் இடம் பெறுவது பற்றியது. வளர்ச்சி மன்றத்தைப் பொறுத்தவரை, இரண்டு வளர்ச்சி மன்றங்கள் இருக்கின்றன. ஒன்றில்தான் கலந்து கொள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்படுகின்றனர். தெற்கு வளர்ச்சி மன்றத்திற்கு அழைப்பு வரவில்லை. அதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஆரம்பத்திலேயே நான் இதற்கு பதிலளித்து விட்டேன். மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மன்றங்களிலும் இடம் பெறும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

Transfers of Panchayat Union Teachers

* 8 *Q.*—THIRU K. MEENAKSHISUNDARAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state--

(*a*) whether the Government have received around 5th June 1978 any petition from the State General Secretary of the Teachers' Association requesting to avoid the intervention of the representa-tives of both the party and the public in the transfers of the Panchayat Teachers ; and

(*b*) if so, the action taken thereon?

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களின் மாறுதல்கள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களின் மாறுதல்களில் பொது மக்களின் பிரதிநிதிகள், மற்றும் கட்சிப் பிரதிநிதிகளின் தலையீடுகளைத் தவிர்த்திட வேண்டி, ஆசிரியர் மன்றத்தின் மாநிலப் பொதுச் செயலாளரிடமிருந்து 5-6-1978ஆம் நாளளவில் விண்ணப்பம் ஏதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ; (அ) ஆம்.

(இ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் ; கேள்வியிலே உள்ள வாசகத்திற்கு கேற்ப, மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரி